# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 149/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Tr. Jeeva (Gr.I 396) |
| Father/Husband's Name | : Perumal |
| Village | : Madurantakam Traffic Police |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மதுராந்தகம் போக்குவரத்து காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். கடந்த 13.04.2023 அன்று மாலை ரோந்து பணிக்காக நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பற்குணன், காவலர் 401 விக்னேஷ் ஆகியோர்கள் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம், வேதாசலம் நகர், குண்டூர் ஆகிய இடங்களில் ரோந்து பணி மேற்கொண்டோம். அப்போது பிஎஸ்என்எல் அலுவலகம் பின்புறம் இராட்டிணகிணறு சாலையில் வந்து கொண்டிருந்த போது எதிரி ராஜன் (எ) லட்சுமிகாந்தன் த/பெ. சுரேஷ் என்பவர் சாலையில் போக்குவரத்து வாகனங்களை மறித்து அசிங்கமாக ஓத்தா, தெவிடியா பசங்களா, என்னை பார;த்தா பயம் இல்லையா, இந்த பக்கங்கள் எல்லாம் வரகூடாது, போற வர வாகனங்களை அடித்து உடைத்துவிடுவேன் என்றும், திரும்பி போயிடுங்க என்றும், நான் யார் தெரியுமா என்றும் பொதுமக்களை பார்த்து பேசி அச்சுறுத்தினார். ரோந்தில் சென்ற நாங்கள் அவரை மடக்கி பிடித்து பின்னர் விசாரித்து இரவு 19.30 மணிக்கு கைது உதவி

ஆய்வாளர் செய்தார். பின்னர் 20.00 மணிக்கு அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து செங்கல்பட்டு காவல் நிலைய குற்ற எண்.200/2023 பிரிவுகள் 294(b) IPC, 7(1)(a) CLA Act கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் காவல் உதவி ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் அந்த காவல் நிலையத்தில் எத்தனை வருடங்களாக பணிபுரிகிறேன் என்றால் நியாபகமில்லை. அன்றைய தினம் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் மாலை 05.30 மணிக்கு. சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து எத்தனை கி.மீ. என்றால் 3 முதல் 3.5 கி.மீ. தூரம் இருக்கும். எவ்வளவு நேரத்தில் அங்கு செல்லலாம் என்றால் அரை மணி நேரத்தில் செல்லலாம். சரித்தர பதிவேடு குற்றவாளிகள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றால் ஒரு சிலரை தெரியும். எதிரி சம்பவயிடத்தில் இடது புறத்தில் இருந்தாரா அல்லது வலது புறத்தில் இருந்தாரா என்றால் அந்த இடம் ஒருவழி சாலை அவர் நடுசாலையில் இருந்தார்.

சம்பவயிடத்தில் என்னென்ன கடைகள் இருக்கிறது என்றால் நினைவில்லை. எதிரி யாரை பார்த்து அசிங்கமாக திட்டி கொண்டிருந்தார் என்றால் பொது மக்களை. அவர்கள் பெயர் என்ன என்று கேட்டால் பெயர் தெரியாது. பொது மக்கள் யாரையும் சாட்சியாக விசாரித்தீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அதிகாரிக்கு தான் தெரியும். பொதுமக்கள் சுமார் எத்தனை பேர் சம்பவத்தன்று இருந்தார்கள் என்றால் நினைவில்லை. நான் சம்பவத்தன்று அங்கு செல்லவில்லை என்றாலும், உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.